22.07.2025

**OS.No. 94/2024**

PW1- ருக்மணி, க/பெ. ராமானுஜம்,

**1ம் பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) புல எண் 31/4ஐ பொறுத்தவரையில் வெங்கட்ராம நாயுடு குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரிதான். புல எண் 31/4ஐ பொறுத்து வெங்கட்ராம நாயுடு குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் வெங்கட்ராம மகன்களில் ஒருவரான எத்திராஜீக்கு மேற்படி புல எண் 31/4ஐ பொறுத்து அவருக்கு பாகமாக காட்டப்பட்டு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி புல எண் 31/4ஐ பொறுத்து பாகப்பத்திரத்தில் குறிப்பிடும் போது அதன் ஒரு பக்க ஜக்பந்தியாக ஏரிக்கால்வாய்க்கும் தெற்கு என்று குறிப்பிட்டு சரியான புல எண்ணையும் சரியான ஜக்பந்தியையும் குறிப்பிட்டு மேற்படி பாகப்பத்திரத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2) அந்த வகையில் புல எண் 31/4ஐ பொறுத்தவரையில் எத்திராஜீக்கு பாகம் ஒதுக்கப்பட்டு மொத்த விஸ்திரீனம் 2.20 ஏக்கரில் 1.15 ஏக்கர் எத்திராஜீக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனக்கு தெரியாது. வழக்கில் புல எண் 31/8, 31/9, 31/11 பொறுத்தவரியல் கோவிந்தராஜீக்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால் சரிதான். மேற்படி சொத்தை கோவிந்தராஜ் ஜெயலட்சுமி என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் எங்களுக்கும் கிரயம் கொடுத்துள்ளார். ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுக்கும்போது புல எண் 31/8, 31/9, 31/11 ஆகிய நிலங்களுக்கான சரியான ஜக்பந்தியை குறிப்பிட்டும் புல எண்ணை பொறுத்து தவறான புல எண் ஆன 31/4 என்று

குறிப்பிட்டும் கிரயத்தை கொடுத்தார் என்றால் அவர்களுக்கு கொடுத்து இருப்பார்கள்.

3) அந்த வகையில் தாவா சொத்தை கிரயம் செய்கிற ஜெயலட்சுமி சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். அவ்வாறு அனுபவித்து வருகிய ஜெயலட்சுமி 1ம் பிரதிவாதி தமிழ்செல்வன் சரியான புல எண் 31/8, 31/9, 31/11 குறிப்பிட்டும் சரியான ஜக்பந்தியை குறிப்பிட்டும் மேற்படி கிரயத்தை ஏற்படுத்தினார் என்றால் கோவிந்தராஜ் மேற்படி கிரயத்தை எங்களுக்கு கொடுத்துள்ளார். ஜெயலட்சுமி மேற்படி தாவா சொத்தை கிரயம் வாங்கிய பின்பு என் வீட்டுக்காரர் கிரயம் வாங்கிய சொத்து என்பதால் அந்த பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல.

4) கோவிந்தராஜ் தாவா சொத்தை ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுத்த பின்பு அவருக்கு அந்த சொத்தில் உரிமை இல்லை என்றால் நாங்களும் அந்த சொத்தை வாங்கினோம். ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுத்த பின்பு நாங்கள் வாங்கியது செல்லாது என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் அவருக்கு உரிமை இல்லாத தாவா சொத்தை 27.07.1979ம் தேதியில் ஆவண எண் 883/1979 முன்னிலைக்கு என் கணவருக்கு கொடுத்த கிரயம் செல்லாத ஒன்று என்றால் சரியல்ல. மேற்படி கிரயத்திற்கு என் கணவர் சுவாதினம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல நாங்கள் தான் பயிர் செய்து வருகிறோம் என்பது பொய் என்றால் சரியல்ல.

5) பின்பு எனது கனவர் ராமானுஜம் தாவா சொத்தை மீண்டும் 22.08.1979ம் தேதியில் ஆவண எண் 911/1979 முன்னிலைக்கு விடுதலை பெற்றது செல்லாத ஆவணம் என்றாலும் அதன் முன்னிலைக்கும் எனது கணவருக்கும் தாவா சொத்துக்கு எந்த விதமான உரிமையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதன் முன்னிலைக்கும் எனது கணவர்

செய்த எல்லா வில்லங்கங்களும் செல்லாது என்றால் சரியல்ல. அந்த வில்லங்கங்கள் அனைத்தும் சட்டத்திற்கு புறம்பானவை என்றால் சரியல்ல. அதன் முன்னிலைக்கும் எனது கணவர் ராமானுஜம் 30.06.1996ம் தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணமான 30/1996 உயிலும் ஒரு செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் எனது கணவர் ராமானுஜம் எனக்கு பாகம்காட்டி ஒதுக்கிய தாவா சொத்துக்களை பொறுத்து சட்டப்படி செல்லாது ஆவணமாகும் என்றால் சரியல்ல. மேற்படி உயில் முன்னிலைக்கு எனது கணவர் இறந்த தேதியான 20.06.2015 முதல் நான் தாவா சொத்துக்களை சுவாதினம் எடுத்து அனுபவித்து வருவதாக சொல்லவது தவறான ஒன்றாகும் என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தில் உயில் முன்னிலைக்கு நான் எந்தகாலத்திலும் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்தவரையில் 1ம் பிரதிவாதி தமிழ்செல்வன் தான் பயிர் வைத்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்த வரையில் 1ம் பிரதிவாதி தமிழ்செல்வனுக்கு தான் பாத்தியப்பட்டது என்றாலும் எனக்கு உரிமையில்லை என்றாலும் சரியல்ல.

7) தாவாவில் நான் எனது கணவர் செய்துள்ளதாக சொல்லியுள்ள வில்லங்கங்கள் அனைத்திலும் 1ம் பிரதிவாதி தமிழ்செல்வன் தரப்பினர் இல்லாததால் அந்த வில்லங்கங்கள் 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. சொத்திற்கு உரிமையில்லாமல் எனது கணவர் ராமானுஜம் ஏற்படுத்திய வில்லங்கங்கள் எல்லாம் சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது கணவர் எந்த காலத்திலும் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லியுள்ள வில்லங்கங்களுக்கும் 1ம் பிரதிவாதி உரிமையாளர் என்ற அடிப்படையில்

தாவா சொத்தை அனுபவித்து வருவதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

8) தாவா சொத்தை பொறுத்து 10.12.2021ம் தேதியில் 1ம் பிரதிவாதி அத்துமீறி உள்நுழைந்ததாக சொல்லப்படுவது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து அது அவர் அனுபவத்தில் உள்ள ஒன்று அதில் அவர் அத்துமீறி உள்நுழைய தேவையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்தவரையில் 01.09.1997 தேதியில் 1ம் பிரதிவாதி ஜெயலட்சுமியிடம் கிரயம் பெற்ற அன்றே சொத்தின் சுவாதினீத்தை எடுத்து அன்று முதல் இன்று வரை அவர் சுவாதினத்தில வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் நாங்கள் தான் பயிர் வைத்து வந்தோம் தற்போது அவர் பயிர் வைத்து வருகிறார். மேற்படி சொத்தில் 1997ல் கிரயம் வாங்கி பிறகு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் என் மாமனார் பெயரில் பட்டா உள்ளது, பட்டா எண் என்னவென்றால் பட்டா எண் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி 1997ல் கிரயம் வாங்கிய பின்பு பட்டா எண் 277 முன்னிலைக்கு அவர் பெயரில் பட்டா மாற்றப்பட்டு இன்று வரையில் 1ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்றாலும் பொய்யாக என் மாமனார் பெயரில் பட்டா உள்ளது என்று சொல்கிறேன் என்றாலும் தெரியாது. 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றாலும் தற்போது நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

9) 1ம் பிரதிவாதி திருவண்ணாமலை ஐசிஐசிஐ வங்கி கிளையில் 2019ம் ஆண்டு தாவா சொத்தை வைத்து கடன் பெற்று மீண்டும் அந்த கடனை அடைத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 1997ல் கிரயம் பெற்று எனது கணவர் 2015ல் இறக்கும் வரையில்

1ம் பிரதிவாதி தான் பயிர் வைத்து வந்தார் என்பது எனது கணவருக்கும் எனக்கும் தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் 1ம் பிரதிவாதி பயிர் வைக்கும் போது எனது கணவர் எந்தவிதமான ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் எனது கணவர் அவரது பெயரில் தாவா சொத்து குறித்து பட்டா மாற்ற முயற்சியும் எடுக்கவில்லை சுவாதீனம் பெறவும் முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் எனது கணவர் உயிருடன் இருக்கும் வரையில் எந்தவிதமான வரியும் அரசுக்கு செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

10) 1ம் பிரதிவாதி 1997ல் கிரயம் பெற்று 25 வருடமாக சொத்தை அனுபவித்து வருகிறார் என்பதால் தான் தாவா சொத்து குறித்து வழக்கு தாக்க செய்ய இந்திய காலவரையறை சட்டம் இடம் தராது என்பதால் தான் 10.12.2021ல் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்ததாகவும் அதன் பின்பு தான் 1ம் பிரதிவாதி 1997ம் வருடம் கிரயம் பெற்றது தெரியவந்ததாக சொல்லியுள்ளது தாவாவை தாக்கல் செய்ய காலவரையறையை ஏற்படுத்த என்னால் பொய்யாக சொல்லப்பட்ட சங்கதிகள் என்றால் சரியல்ல.

11) தாவா சொத்தை பொறுத்து கோவிந்தராஜிடம் கிரயம் பெற்ற ஜெயலட்சுமி தொடர்ந்து 18 ஆண்டுகள் அனுபவித்து வந்தும் அதன் பிறகு ஜெயலட்சுமியிடம் 1ம் பிரதிவாதி கிரயம் பெற்று 25 ஆண்டுகள் என ஆக 43 ஆண்டுகள் தாவா சொத்தின் சுவாதீனம் ஜெயலட்சுமியிடமும் பின்பு 1ம் பிரதிவாதியிடம் தான் உள்ளது என்றால் அது எங்கள் சொத்து ஆகும். எனவே, தாவா சொத்தில் எந்தவித அனுபவமும் அருகதையும் இல்லாமல்

1ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த தாவா வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அந்த வகையில் இந்த வழக்கானது இந்திய காலவரையறை சட்ட தோஷத்தால் பாதிக்கப்பட்ட ஒரு வழக்கு என்றால் சரியல்ல.

12) மேற்படி தாவா சொத்தின் பட்டாவை பொறுத்து எனது கணவர் மற்றும் அவரது சகோதரர் சுந்தராஜி மற்றும் அவரது தந்தை ரங்கசாமி பெயரில் இருந்துவந்ததாக சொல்லியுள்ளதும் தவறான ஒன்று என்றால் சரியல்ல. 2002ல் திருவண்ணாமலை வட்டாட்சியர் இரு தரப்பையும் விசாரித்து 1ம் பிரதிவாதி பெயரில் கொடுத்த பட்டாவை தவறு என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அந்த வகையில் 18.12.2021ம் தேதியில் தாவா சொத்து குறித்து என் பெயரில் பட்டா மாற்ற 2ம் பிரதிவாதியான திருவண்ணாமலை வட்டாட்சியரிடம் மனு கொடுத்ததாக சொல்லியுள்ளது 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டு 22.12.2021ம் தேதியில் தாவா சொத்து குறித்து என் பெயரில் பட்டா மாற்ற 2ம் பிரதிவாதியான திருவண்ணாமலை வட்டாட்சியரிடம் மனு கொடுத்ததாக சொல்லியுள்ளது 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி மனுக்களை பொருத்து 2ம் பிரதிவாதி எந்தவிதமான விசாரணையும் செய்யாமல் கிடப்பில் போட்டுள்ளார் என்பது தவறான சங்கதி என்றால் சரியல்ல.

13) தாவா சொத்து பொறுத்தவரையில் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்பதால் தான் 2ம் பிரதிவாதி தீர விசாரித்து மேற்படி நான் கொடுத்த மனுக்களை நிராகரித்து விட்டார் என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் மற்றும் வகையரா தாவா சொத்தை பொறுத்து சரியான ஜக்பந்தியை குறிப்பிட்டும் தவறான புல எண்ணை குறிப்பிட்டு

ஜெயலட்சுமிக்கு கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்றால் எங்களுக்கு தான் கிரயம் கொடுத்தார்கள். எனது கணவர் வாங்கியது தவறான கிரயம் என்றால் சரியல்ல. அவ்வாறு தாவா சொத்தை கிரயம் வாங்கிய ஜெயலட்சுமி சரியான புல எண் மற்றும் ஜக்பந்தியை குறிப்பிட்டு 1ம் பிரதிவாதிக்கும் அவரது தந்தைக்கு தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்திவிட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு சரியான ஜக்பந்தியை குறிப்பிட்டும் சரியான புல எண் குறிப்பிட்டும் ஜெயலட்சுமி 1ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்தவிபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல.

14) இருந்தும், தாவா சொத்தை கோவிந்தராஜ் ஜெயலட்சுமிக்கு தாவா சொத்தை தவறாக கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக ஊரில் எங்களுக்கும் 1ம் பிரதிவாதிக்கு பஞ்சாயத்து நடந்தது என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 1997ல் 1ம் பிரதிவாதி கிரயம் பெற்று தற்போது வரை 28 ஆண்டுகளாக அதனை அனுபவித்தும் அவர் பெயரில் பட்டா மாற்றியும் அதனை ஈடு காட்டி கடன் பெற்றும் அவர் அனுபவித்தில் வைத்து அனுபவித்து வருவதால் தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு அனுபவ பாத்தியம் ஏற்பட்டு வருகிறது என்றால் சரியல்ல.

15) தாவாவில் கூறியுள்ள சொத்தை நானும் எனது கணவரும் எந்த காலத்திலும் அனுபவித்து வரவில்லை அவ்வாறு சொல்லியுள்ளதும் அதில் 1ம் பிரதிவாதி அத்துமீறு நுழைந்துவிட்டார் என்று சொல்லியுள்ளதும் தவறான சங்கதி என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நானோ எனது குடும்பத்தாரோ எந்த காலத்திலும் அனுபவித்து வரவில்லை என்ற காரணத்தினாலும் அதில் எங்களுக்கு எந்தவிதமான உரிமையும்

ஏற்படவில்லை என்பதாலும் தாவாவில் நாங்கள் கோரியவாறு உரிமை விளிம்புகை பரிகாரமோ, நிரந்தர உறுத்துக்கட்ளை பரிகாரோா பெற அருகதையற்றவர்கள் என்றால் சரியல்ல. சொத்தின் சுவாதினமும் 1ம் பிரதிவாதி எங்களிடம் ஒப்படைக்க கேட்டுக்கும் பரிகாரமும் தவறானது என்றால் சரியல்ல. அதே போல் 01.09.1997 தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் கிரய ஆவணமான 671/1997ல் கிரய பத்திரத்தை பொறுத்து செல்லாது மற்று இல்லா நிலையானது என்று அறிவிக்கும் கோரியுள்ள பரிகாரமும் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

16) அதேபோல் தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியின் பேரில் உள்ள பட்டாவை நீக்கி எங்கள் பெயரில் மீண்டும் பட்டாவை மாற்ற 2ம் பிரதிவாதிக்கு செயல் உறுத்து கட்டளை பரிதாரமும் கோர அருகதை அற்றவர் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவாவே நிலைக்கத்தக்கது அல்ல பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா என்பதால் இந்த 1ம் பிரதிவாதியின் சிறப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்